**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.

**அசல் வழக்கு எண்.107/2013**

| | | | |
|---|---|---|---|
| வாக்குமூலம் - **வா.சா.1** | | தொடங்கும் நேரம் : | 12.26 p.m. |
| | | முடிவுறும் நேரம் : | 12.36 p.m. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **மணிமேகலை** | மதம் | : | -- |
| க/பெ. | : | **அருண்** | தொழில் | : | -- |
| கிராமம் | : | **கெங்காபுரம்** | வயது | : | **32** |
| தாலுக்கா | : | **சேத்பட்** | நாள் | : | **27-10-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் **27**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 4ம் வாதியாவேன். இந்த வழக்கினை எனது தகப்பனார் 1ம் வாதி தாக்கல் செய்து, முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் காலமாகிவிட்டார். தற்போது என்னை வா.சா.1 ஆக விசாரிக்க வேண்டும் என்று எனது முதல் விசாரணைக்காக சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **06.07.1981** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **05.02.1986** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **11.07.1994** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **01.06.1998** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.4.** |
| **05.** | **03.12.2010** | **தேதியிட்ட 1ஆம் வாதியின் பெயரில் உள்ள வந்தவாசி துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா. (பட்டா எண்.149) - அசல்.** | **வா.த.சா.ஆ.5.** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.